(வலைப்பின்னல் மாற்றுமுறை)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1999ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம்

---

*(1999 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1999, திசெம்பர் மாதம் 10 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக்** குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

**விலை : ரூபா 4.00** **தபாற் செலவு : ரூபா 3.50**

**1999 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம்**

*[1999 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*ச.வ.—ஓ. 153/34.*

**1998 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம் 1999 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க, ஒதுக்கீட்டு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1998 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூற்றெட்டாம் ஆண்டின் 61 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "அத்தகைய வரும்படியின் கூட்டுமொத்தத் தொகையானது தொண்ணூற்று ஏழாயிரத்து இருபத்தேழு மில்லியன் ரூபாவினை விஞ்சுதலாகாது." என்னுஞ் சொற்களுக்குப் பதிலாக, "அத்தகைய வரும்படியின் கூட்டுமொத்தத் தொகையானது நூற்றுப்பதினேழாயிரத்தி இருபத்தேழு மில்லியன் ரூபாவினை விஞ்சுதலாகாது." என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 ; (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல.32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ்ரோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.